# பெண்கள் செய்தி மடல்

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் - 4 டிசம்பர் 1999


பொருளடக்கம்


1. பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான சர்வதேச தினம்
2. விடியல்
3. வவுனியா இடம் பெயர் முகாம்
4. புலம் பெயர் பெண்களுக்கான விழிப்புணர்வூட்டும் சுவரொட்டி பயிற்சி பட்டறை
5. திட்டமிடலும் ஒருங்கிணைப்பும்
6. ஐ.நா. விருதின் அமைதிப் போராளி


மனிதர்

மனித உடலுடன் மட்டும் அல்ல
மானிடருள் ...........
மானிட உணர்வுகளுடனும்
மானுட சிந்தனைகளுடனும்
வாழ்தலே ............
உயர் நிலைக்கு இட்டுச் செல்லும்

ஆசிரியர்

# பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான சர்வதேச தினம்

***25 நவம்பர் 10 டிசம்பர்***

கிழக்குப் பிராந்திய பெண்கள் நிறுவனங்களின் கூட்டமைப்பானது சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினரின் அனுசரணையுடன் பெண்கள் மீதான வன்முறையை எதிர்க்கும் செயலணியின் சர்வதேச தினத்தையொட்டி கருத்தரங்கினையும் கலை நிகழ்ச்சியினையும் 01.12.99 புதன் கிழமை மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் நடத்தியது.

வன்முறைகளுக்கு உட்படுத்தப்பட்ட பாதிக்கப்பட்ட பெண்களை நினைவு கூறுவதற்காகவும் வன்முறைகளை எதிர்த்து பெண்கள் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் மெழுகுதிரியில் ஒளியேற்றி இருநிமிட மௌன வணக்கம் செலுத்தினர்.

இவ்வன்முறைகளை வெளிக்கொணர்ந்து அவற்றை எதிர்க்குமுகமாக கவிதை, நாடகம், கவிதா நிகழ்வு, பாடல் போன்ற நிகழ்வுகள் இடம் பெற்றதுடன், அங்கு உரையாற்றியவர்கள் இது சம்பந்தமாக பின் வரும் கருத்துக்களை முன்வைத்தனர்.

நாட்டின் பல பாகங்களிலும் பாலியல் வன்முறையும், சிறுவர் துஷ்பிரயோகமுமே கூடுதலாக நடைபெறுகின்றது. இதற்கு காரணம் இவற்றை வெளியில் சொல்ல பயம், வெட்கம் - மானம் போய்விடும் என்ற மனப்பாங்கில் பெண்கள் இருத்தலாகும். ஆகவே பெண்கள் தமக்கெதிராக இழைக்கப்படும் வன்முறைகளை நீதிமன்றங்களில் துணிந்து நிரூபிக்க முன்வரல் வேண்டும்.



இன்றைய காலகட்டத்தில் பெண்கள் குடும்ப வன்முறைகள், போர்க்கால வன்முறைகள், தொழில் சார் வன்முறைகள் போன்றவற்றை எதிர்நோக்குகின்றனர். இவற்றை பெண்ணிற்குரிய தனிப்பட்ட வன்முறையாகக் கருதாது எல்லோருக்கும் பொதுவான சமூகப்பிரச்சினை என்ற மனப்பாங்குடன் ஏற்றுக் கொண்டு இதனை எதிர்க்க முன்வரவேண்டும்.

தகுந்த ஆதாரத்துடன் குற்றவாளியை நீதிமன்றத்தில் ஒப்படைத்தாலும் சட்டத்திலுள்ள ஓட்டைகளால் இவர்கள் சில மாதங்களில் விடுதலை செய்யப்படுகிறார்கள் எனவே சட்டத்தில் பாரபட்சம் காட்டாது சரியான தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

உடல் ரீதியாக நடைபெறும் வன்முறைகளை விட உளவியல் ரீதியாக நடைபெறும் வன்முறைகளே பெண்களை பெரிதும் பாதிப்பிற்குள்ளாக்குகின்றன. அதாவது இது அவர்களின் அறிவு, திறன், ஆற்றல் என்பவற்றிற்குத்தடையாக இருந்து குடும்பத்தின் சமூகத்தின் நாட்டின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் தடையை ஏற்படுத்துகிறது. இந்நிலமை மாற வேண்டுமெனில்,

1. பெண்களுக்கான கல்வியறிவை மேம்படுத்தல்
2. பெண்கள் தம்மைச் சுற்றியுள்ள விடயங்களை அறிதல்
3. கருத்துக்களைச் சுதந்திரமாகப் பரிமாறுதல்
4. குறிப்பிட்ட விடயங்கள் பற்றிய தகவல்களை ஆசிரியர்கள், மாணவர்கள், அரச, அரசசார்பற்ற அமைப்புக்கள் விளக்குவதும், விழிப்புணர்வூட்டுதலும் வேண்டும்.

முக்கியமாக நாம் எல்லோரும் இணைந்து புரிந்துணர்வுடன் செயற்படுதல் மூலம் வன்முறைகள் எந்த மட்டங்களில் நடைபெற்றாலும் தடுக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ள முடியும்.




## சூரியா நூலகம்



சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தில் ஒரு நூல் நிலையம் உண்டு. இங்கு பெண்கள் தொடர்பானவையும், ஏனைய சமூக விஞ்ஞானம் தொடர்பான நுல்களும் உள்ளன. அத்துடன் பெரும்பாலும் பெண்கள் எழுதிய நாவல்கள், சிறுகதைத் தொகுப்புக்கள், கவிதைத் தொகுதிகள் ஆகியவற்றையும் சூரியா நூலகம் சேகரித்து வைத்துள்ளது. பெண்கள் சம்பந்தமான சஞ்சிகைகளும் சமகாலத் தகவல்களைக் கொண்ட பிரசுரங்களும் சூரியா நூல் நிலையத்தில் உள்ளன. இவை தவிர தமிழ் தினசரிப் பத்திரிகைகளையும் நூல் நிலையம் தருவிக்கின்றது. சாதாரண வாசகரிலிருந்து சமூக விஞ்ஞான துறைகள், பெண்ணியல் ஆய்வுகள் ஆகியவற்றில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் பல்கலைக்கழக மாணவர், ஆய்வாளர் வரை பலருக்கும் இங்குள்ள நூல்களும், ஆவணங்களும் பயன்படக் கூடியவை. பெண்கள் தொடர்பான விபரண வீடியோப்படங்கள், ஒலிப்பதிவு நாடாக்கள் ஆகியவையும் உள்ளன.

இந்நூல் நிலையம் வெள்ளி தவிர்ந்த வாரநாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப.5.00 மணிவரை திறந்திருக்கும். அத்துடன் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 9.00 மணிக்கும் திறந்திருக்கும்.

நூலகத்தைப் பயன்படுத்துவதற்குக் கட்டணங்கள் ஏதுமில்லை.

# வவுனியா இடம் பெயர் முகாம்

அவலம் நிறைந்த அகதிகளின் பெருக்கம் உலக நாடுகள் அனைத்துமே எதிர் நோக்கும் கால கட்டம் இது. இப்படியான சந்தர்ப்பங்களில் அகதி முகாம்களில் வாழும் பெண்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. ஆண், பெண் எனும் அசமத்துவ நிலை உயர் பதவியில் இருந்து அடிமட்ட நிலை வரை பெருகிக் கொண்டு வரும் இச் சூழலில் அகதி முகாம்களில் வாழும் பெண்களும் இந் நிலைமையின் மோசமான விளைவுகளை எதிர் கொள்கின்றனர்.

இன்று பெண்களுக்கென குரல் கொடுத்து வரும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் 90-94ம் ஆண்டு காலப்பகுதியில் இடம் பெயர்ந்திருந்த பெண்களுடன் தன் வேலைத் திட்டங்களை ஆரம்பித்தது. அண்மையில் UNHCR அமைப்பு வவுனியா முகாம் பெண்களுடைய தேவை நிலைமையினை ஆய்வு செய்து தரும்படி சூரியா நிலையத்தினரிடம் கேட்டிருந்தனர். எனவே தமது 4 வருடகால முன் அனுபவங்களைக் கொண்டு 31.10.99, 1.11.99 ஆகிய 2 நாட்கள் வவுனியாவில் உள்ள 156 முகாம்களில் பின்வரும் 6 முகாம்களைச் சூரியா நிலையச் சகோதரிகள் சந்தித்தனர்.

| | | |
|---|---|---|
| பூந்தோட்டம் I | சிதம்பரபுரம் | நெலுக்குளம் |
| பூந்தோட்டம் 8 | கோவிற் புளியங்குளம் | வேப்பங்குளம் |

**முகாம்களில் அடையாளம் காணக்கூடியதாயிருந்த சில நிலைமைகள்**



சாதாரண சமூக வாழ்க்கையிலுள்ள சிக்கல்கள் முகாம்களில் நெருக்கமாகவும், வசதியீனங்களுடனும் வாழ்வதால் அதிக தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
இது பெண்களுக்கு மேலதிக சுமையை ஏற்படுத்துகிறது.
எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனம்
உளவியல் தாக்கங்கள்
குடும்ப உறவு முறைகளுக்கிடையிலான சீர்கேடுகள்
சிறுவர் துஷ்பிரயோகம்
மது பாவனைக்கு அடிமையாதல்
வன்முறைகள்
போதைப் பொருள் பாவனை தீவிரமாகப் பரவுதல்
சுகாதார வசதி, குடும்பக் கட்டுப்பாட்டு வசதி குறைவு
கல்வி நிலைப் பாதிப்பு
பாலியல் துஷ்பிரயோகம்
மாதவிடாய், மகப்பேறு போன்ற சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு விஷேட வசதிகள் இல்லாத நிலை.

**அவதானிப்பின் பின், முன் வைக்கப்பட்ட கருத்துக்கள்**

இங்குள்ள பெண்கள் நிலைமைகள் குறித்து அதிக கவனம் எடுத்து, அவர்கள் பிரச்சினைகள் குறித்து விஷேட ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

* * * * * * * * * * * * * * *

**கோழி கூவி பொழுது விடியுமா?**
**சேவல் கூவி பொழுது மறையுமா?**

### சட்டத்தகவல்கள்

வன்முறை ஒரு அசுர வேகத்தில் மக்களிடையே பரவிக் கொண்டு வரும் சந்தர்ப்பங்களில் பெண்கள் அதிகமாக இத்தாக்கத்திற்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகிறது. இவர்கள் மக்கள் என்ற ரீதியில் பொது வன்முறையை அனுபவித்துக் கொண்டு "ஆண், பெண்" என்ற அசமத்துவ பாதிப்பையும் பெண்கள் என்ற காரணத்திற்காக சந்திக்க வேண்டி ஏற்படுகிறது. இதில் முக்கியமானதொன்றாக குடும்ப வன்முறை காணப் படுகிறது.

திருமணம் என்பது நெகிழ்தன்மையற்ற ஒரு இரும்புச் சிறையாக எத்தனையோ பெண்கள் முட்டி மோதி வாழ்விழந்து வரும் இச்சந்தர்ப்பத்தில் கடந்த ஜுலை மாதம் 11ம், 12ம் திகதிகளில் சூரியா நிலைய அலுவலகர்களுக்கு மனித உரிமை இல்லத்தின் நிறை வேற்றுப் பணிப்பாளர் செரின் சேவையர் சட்டத்தரணிகள் முறையே என் சிவானந்த ராஜா, வி.சந்திரசேகரம் ஆகியோர் நடத்திய சட்டம் பற்றிய வகுப்பின் இடம் பெற்ற விவாகரத்து தொடர்பான சில சட்டரீதியான தகவல்களை தரலாம் என நினைக் கிறோம்.



### விவாகரத்து (Divorce)

திருமணம் ஒன்று சட்டரீதியான நீதிமன்றம் ஒன்றினால் முடிவுறுத்தப்படுதலே விவாகரத்து எனப்படுகிறது. அதாவது கணவன் - மனைவி போன்றோர் தமது அந்தஸ்திலிருந்து விடுபடுவதாகும்.

### விவாகரத்துக்கான அடிப்படைக் காரணிகள்

விவாகரத்துப் பெறுவதற்கான சட்டக் காரணிகள் ஒவ்வொரு சட்டங்களிலும் வெவ்வேறு பட்டுக்காணப்படுகின்றன.

பொதுச் சட்டத்தின் கீழ் விவாகரத்துப் பெறுவதற்கான காரணிகள்.

இச்சட்டத்தின் கீழ் மூன்று முக்கிய காரணி கூறப்பட்டுள்ளன.

(1) **வன்ம உறவறுத்தல்** - வன்ம உறவறுத்தல் என்பது கணவன் அல்லது மனைவி வேண்டுமென்று திருமண உறவை அறுத்துக் கொண்டு பிரிந்து வாழ்வதைக் குறிக்கும் இது சாதாரண வன்ம உறவறுத்தல் அமைய வன்ம உறவறுத்தல் என இரண்டு வகைப்படும்.

சாதாரண வன்ம உறவறுத்தல் என்பது குற்றம் செய்தவர் குற்றமற்றவரை விட்டுவிட்டு பிரிந்து வாழ்வதாகும். உதாரணமாக கணவன் குற்றம் புரிந்துவிட்டு அவரே பிரிந்து வாழ்தல் ஆகும். அமைய வன்ம உறவறுத்தல் என்பது குற்றமற்றவர் குற்றம் புரிந்தவரை விட்டுவிட்டு பிரிந்து வாழ்வதாகும். உதாரணமாக குற்றம் புரியாத மனைவி கணவரைவிட்டு பிரிந்து வாழ்தலாகும். இது கணவன் மனைவியை துன்புறுத்தி வெளியேற்றும் சந்தர்ப்பத்தைக் குறிக்கும்.

ஆனால் இது கட்டாயமாக வீட்டைவிட்டு பிரிந்து வாழ்வதாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை, ஒரே வீட்டில் இருவரும் இருந்தாலும் அவர்கள் ஊணிலும் உறக்கத்திலும் ஒன்றாக சேர்ந்து வாழாவிடினும் போதுமானதாகும்.

(2) **சோரம் போதல் :** கணவன் அல்லது மனைவி, வேறொருவருடன் உடலுறவு கொள்வதைக் குறிக்கும். அதாவது எந்த நபருடன் உடலுறவு கொள்ளப்பட்டதோ அவரை, இக்காரணியின் கீழ் விவாகரத்து கோரும் போது இணை - எதிராளியாக குறிப்பிட வேண்டும். இதனை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

(3) **குணப்படுத்த முடியாத மலட்டுத்தன்மை:** அதாவது கணவன் அல்லது மனைவி அவர்கள் திருமணம் புரியும் போது பிள்ளை பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் இல்லாவிடில் இந்த அடிப்படையில் விவாகரத்துக் கோரலாம். அதாவது மலடாக இருந்திருந்தால் மற்றவர் விவாகரத்துக்கோரி நீதிமன்றம் செல்ல முடியும். திரு மணம் முடிந்து சிலகாலத்தின் பின்னர் ஏதாவது விபத்து போன்ற காரணங்களால் இந்நிலையை அடையின் விவாகரத்து கோர முடியாது.

விவாகரத்து வழக்கு கோரும்போது குற்றமற்ற திறத்தவரே (நபரே) வழக்கிடும் உரிமையுண்டு உதாரணமாக வன்ம உறவறுத்தல் மூலம் கணவன் மனைவியை விட்டுவிட்டு பிரிந்து வாழ்ந்து விட்டு அவரே வழக்குப் போட முடியாது. மனைவிக்கே வழக்கு தாக்கல் செய்யும் உரிமையுண்டு.

**கண்டியச்சட்டத்தின் கீழ் விவாகரத்துக்கான காரணிகள்.**

1. மனைவியின் சோரம்
2. கணவனின் சோரத்துடன் கூடிய தகாத நடத்தை
3. கணவன் - மனைவியின் முழுமையானதும், தொடர்ச்சியானதுமான பிரிந்து வாழ்தல்.
4. கணவன் - மனைவி சந்தோசமாக இணைந்து வாழ முடியாமை.
5. இருவரின் ஒத்த சம்மதம் - கணவன் - மனைவி இருவரில் சம்மதம் இருப்பின் அவர்கள் இருவரும் விரும்பின் பிரிந்துவாழலாம்.
6. தொடர்ச்சியாக கணவனால் அல்லது மனைவியால் கொடுமைப் படுத்தப்படல்
7. கணவன் அல்லது மனைவி தொடர்ந்து 5 வருட சிறையில் இருத்தல்.
8. கணவன் அல்லது மனைவி சித்த சுவாதீனமுற்று இருந்தால் அதாவது பித்துப்பிடித்த நிலை

மேற்போன்ற காரணிகளுள் ஏதாவது ஒன்றின் அடிப்படையில் கண்டியச் சட்டத்தின் கீழ் விவாகரத்துப் பெற முடியும்.

தொடரும்........

# புலம் பெயர் பெண்களுக்கான விழிப்புணர்வூட்டும் சுவரொட்டி பயிற்சிப்பட்டறை

வெளிநாட்டிற்கு பணிப் பெண்களாகச் செல்பவர்களும், புலம் பெயர்ந்து வெளிநாட்டில் திருமணத்திற்காக செல்பவர்களும் முகவர்களாலும், சென்ற இடத்திலும் ஏமாற்றப்பட்டு, சித்திரவதைக்குள்ளாகி சிரமப்பட்டு நாடு திரும்பிய பல பெண்களை சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையமானது தம் வேலைத் திட்டத்தில் சந்தித்து வருவதால் இப் பெண்களுக்கான விழிப்புணர்வின் அவசியத்தை கருத்திற்கொண்டு கொழும்பில் உள்ள புலம் பெயர் சேவைகள் நிலையத்தின் அனுசரணையுடன் நவம்பர் 5ம் 6ம் திகதிகளில் மன்றேசா தியான இல்லத்தில் ஓர் சுவரொட்டி பயிற்சி வகுப்பை நடத்தியது.






இவ்வகுப்பில் வாசுகி ஜெயசங்கர், ஜெயந்தி தளையசிங்கம் ஆகியோர் பயிற்சி வழங்குனர்களாக கடமையாற்றினர். இதில் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும், வெளிநாடுகளிற்கு பணிப் பெண்களாகச் சென்று நாடு திரும்பியவர்களும் கலாசாரக்குழுவினரும் கலந்து கொண்டனர். இங்கு பின்வரும் தலையங்கங் களைக் கொண்ட சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டன.

1. எமது தொழில் உரிமைகளை உறுதிப்படுத்துவோம்.
2. சொந்த இடத்தில் சுய உழைப்பு
3. மனைவியின் உழைப்பு மதுவுக்கு இல்லை
4. தாயின் உழைப்பு தந்தையின் பராமரிப்பு
5. வெளிநாட்டுப் பணிப்பெண்களே விழிப்பாய் இருங்கள்
6. தொடர்பு, காப்புறுதி, வேலை, இடம், முகவரி, சம்பளம் அறிந்தபின் புறப்படு.
7. பணிப்பெண்களுக்கு மதிப்புக்கொடு
8. பணிப்பெண்களின் நிலை சிறை

இச் சுவரொட்டிகளை நாட்டின் அனைத்து இடங்களிலும் உள்ள புலம்பெயர் பெண்களின் விழிப்புணர்விற்காக புலம் பெயர் சேவைகள் நிலையம் பயன்படுத்த உள்ளது.

* * * * * * * * * * * * * * *

**பெண்ணால் சமையல் செய்ய முடியுமெனில்**
**ஆனாலும் முடியும் – ஏனெனில்**
**பெண் கருப்பையால் சமைப்பதில்லை**

# திட்டமிடலும் ஒருங்கிணைப்பும்

சாப்பிடவும் நேரமின்றி அவசர அவசரமாக கையில் பட்டதைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு வேலை பார்க்கும் இடத்திற்கு தாமதமாகச் சென்று முகாமையாளரின் பார்வையில் அவிந்து பின் வேலைக்குத் தேவை யான பொருட்களை தவறவிட்டு விட்டோமே என ஏங்கி சக ஊழியரை தொந்தரவு செய்து, பெற்று, மற்றவர்களின் கேலிக்கு ஆளாகி மனம் சலிப்புற்று இதனால் வேலையில் திறமையுடன் ஈடுபட முடியாமல், வேலைத்தேர்ச்சி பெற முடியாமல் வேலையில் உயர்வு பெற முடியாமல், எடுக்கும் சம்பளத்தில் வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய முடியாமல், கடன் வாங்கி, இந்தக் கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் மன உளைச்சலுடன் வாழ்நாளைக் கழிப்பவர்கள் தான் எத்தனை எத்தனை பேர்.. இந்த நெருக்கடிகளைப் பற்றி நாம் சிறிது சிந்தித்துப் பார்ப்போமானால், இத் தொடர் சிக்கல்களுக்குக் காரணம் எந்தவித திட்டமிடுதலும் இல்லாமையே காரணம் என்பது புரியவரும்.

நாம் நமது சொந்த வீட்டு வேலைகளிலும் சரி நமது தொழில் செய்யும் இடத்தில் உள்ள வேலைகளிலும் சரி நேர ஒழுங்கு முறையும் திட்டமிடலும் அவசியம். வேலைக்குச் செல்பவர்கள் தாம் வேலைக்குச் செல்ல வேண்டிய நேரத்தைக் கணக்கிற் கொண்டு காலையில் எழும்ப வேண்டிய நேரம், வீட்டு வேலைகளைச் செய்து முடிக்க வேண்டிய நேரம், வேலைக்கு தயாராகும் நேரம் முதலியவற்றைத் தீர்மானித்தல் வேண்டும். அத்துடன் நாளை செய்ய வேண்டிய வேலைகள், அதற்குத் தேவையான பொருட்கள், யார் யாருடன் எப்படி, ஏன் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் முதல் நாள் இரவு திட்டமிட்டு வைத்துக் கொண்டே படுக்கைக்குச் செல்ல வேண்டும். இவ்வாறு திட்டமிட்டு செயற்படும் போது எமது வேலையின் ஒழுங்கமைப்பு சீரானதாக அமையும். இதனால் மன நெருக்கடி குறைதலுடன் வேலையில் முழுமையாகவே ஈடுபடவும் மற்றவர்களின் நல் அபிப்பிராயத்தைப் பெறவும் முடியும். அத்துடன் நமது செயற்பாடுகளில் எமக்கு உதவியாக ஏனையோரையும் சேர்த்துக் கொள்ளக் கூடிய இயல்பும், திறமையும் எமக்கிருத்தல் வேண்டும். மாறாக எமக்கு என ஒதுக்கப்பட்ட பொறுப்பை (கடமையை) பாரிய சுமையாக எண்ணி அதனால் மன நெருக்கடிக்குள்ளாகி (டென்சன்) மற்றவர்களுடன் கடுமையாகவும், கடுகடுப்பாகவும் நடந்து கொண்டால் நிச்சயம் அவ்வேலை ஓர் பாரிய சுமையாகவே அமைவதுடன், சக ஊழியர்கள் வெறுப் படைவதுடன் மெதுவாக ஒதுங்கிக் கொள்வர். இதனால் அவ்வேலை ஓர் முழுமை பெற்றதாக அமையாததுடன் எமது இலக்கையும் அவ்வேலை சென்றடையாது.

ஆகவே எமது வேலைகளில் நாம் முன்னேறவும், சிறப்பாக அமையவும் கூடியதாக இருக்க திட்டமிடலும் ஒருங்கிணைப்பும் அவசியம்.

### வாருங்கள் தோழியரே

வாருங்கள் தோழியரே
வஞ்சியென்றால்
வசந்தம் என்போரையும் ~ பின்
வஞ்சியெம்மை
வஞ்சனை செய்து
வதைப்போரையும் ~ எம்
வருங்காலம் தனை
வளமாக்க
வரதட்சனை கேட்டு ~ எம்மை
வாழா வெட்டியாக்குவோரையும்
வாகை சூடி
வாழ்ந்து காட்டுவோம்

*இ. அருள்ஜோதி*

### கல்வி

கல்விதனைக் கற்றிடுவோம்.
காலங்கள் போகலாம்
கற்பது போகாது
காத்திருக்கவும் முடியாது
கல்விதனைக் கற்றிடுவோம்
பாடங்கள் அதனை
படித்திடவே நாம்
பாரினிலே வாழ்ந்து
கல்விதனைக் கற்றிடுவோம்
மாணவர் அனைவரும்
மனிதம் போற்றிட
மாண்புடன் வாழ்ந்திட
கல்விதனைக் கற்றிடுவோம்
சத்தியம் காத்து
சாதனை புரிந்து
சித்திரம் படைக்க,
கல்விதனை கற்றிடுவோம்.

*தே. அருட்கவிதா*

# சுனிலா அபயசேகரா: மனித உரிமைப் பாதுகாப்பாளர் போர்க்களத்தீவில் அமைதிப்போராளி

## ஐ. நா. மனித உரிமைகள் விருது

மனித உரிமைகளுக்கான போராட்டத்தில் தலையாய தொண்டு ஆற்றியதற்காக 1998 டிசம்பர் 10 அன்று சுனில் பெணசேகராவுக்கு ஐ.நா.விருது வழங் கப்பட்டது. உலக மனித உரிமைகள் அறிவிக்கையின் பொன்விழாவையொட்டி நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலை மைச் செயலகத்தில் நடந்த விழாவில் ஐ.நா. மனித உரிமைகள் விருது அபயசேகராவுக்கு வழங்கப்பட்டது. அவருடன் உகண்டாவின் ஓஞ்சலினா ஆஷைக்அத்யாம், அமெரிக்காவின் ஜிம்மி கார்ட்டர், பிரேசிலின் ஜோஸ் கிரிகோரி, செக் குடியரசின் அன்னா சபரட்டோவா ஆகியோருக்கும் இந்த விருது வழங்கப்பட்டது.

**முப்பதாண்டுகளாக வன்முறைக் காட்சிகள் ஸ்ரீலங் காவில் நடைபெற்று வருகின்றனவே, பெண்கள் இதுபற்றி என்ன செய்தார்கள்?**

எந்தச் சண்டை நடந்தாலும் பெண்களும் குழந் தைகளும் தாம் அவதிக்குள்ளாகுபவர்கள். ஸ்ரீலங்காவில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வன்முறை காரணமாக வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து சென்றிருக்கின்றன. ஆண்கள் இராணுவத்தில் சேர்வார் கள், அல்லது தீவிரவாதக் குழுவில் சேருவார்கள், அல்லது நாட்டைவிட்டு வெளியே போகவேண்டும். பெண் கள் வீட்டையும் குழந்தைகளையும் பார்த்துக்கொள்ள வேண்டிவரும். ஸ்ரீலங்கா நாட்டுக்குள் இடம் பெயர்ந்தோர் எண்ணிக்கை 10 இலட்சமிருக்கும். அவர்களில் பெரும் பாலானோர் பெண்கள், குழந்தைகள். அரசு ஏற்படுத்திய முகாம்களில் பெண்களின் நிலை பரிதாபகரமானது. ஏனென்றால் உணவு, உடை, மருந்து இவற்றுக்குப் பற்றாக்குறை இருக்கும். ஏதாவது வேலை பார்க்கும்படி பெண்கள் அனுப்பி வைக்கப்படுவார்கள். வேலை செய்யு மிடங்களில் பாதுகாப்பு இல்லை. பாலியல் துன்பங்க ளுக்கு ஆளாகிறார்கள். இராணுவத்தினர் வடக்கிலும் கிழக்கிலும் குவிக்கப்பட்டிருப்பதால் பெண்களைப் பாலி யல் பலாத்காரம் செய்வது மிகவும் அதிகரித்துள்ளது.

சண்டை சமயங்களில் பெண்கள் மீது கட்டுப் பாடுகள் அதிகமாகின்றன. சிங்கள, தமிழ், முஸ்லிம் பெண்கள் எல்லோரும் சிரமப்படுகிறார்கள். ஒருபுறம் பெண்கள் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக வேலைக் குப் போக வேண்டிய அவசியம். மறுபுறம் மரபுகளை மீறாமல், பரம்பரையைக் கட்டிக் காக்கவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு உள்ளது.

இராணுவமும் தீவிரவாதிகளும் பெண்களைப் படைகளில் சேர்த்துக் கொள்கிறார்கள். தற்கொலைப் படையில் மனித குண்டாகச் செயற்பட வேண்டி வரு கின்றது. மரபைக் காக்கும் சமுதாயத்தில் இது அதிர்ச் சியைத் தருகிறது. தெற்காசிய சமுதாயத்தில் பெண்கள் ஆயுதமேந்துவது ஒரு சவாலாக ஆகிவிடுகிறது. இது ஆக்கவிளைவையும் எதிர்மறை விளைவையும் உண்டாக்குகிறது.

அதே சமயம் பெண்களின் குழுக்கள் அமைதி வேண்டுமென்றும், மனித உரிமைகள் காக்கப்பட வேண்டுமென்றும் குரல் எழுப்புகின்றன. 1986இல் 600 தமிழ்ச் சிறுவர்கள் கைதானபோது அன்னையர் முனை உருவாக யாழ்ப்பாண நகரில் கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றன. பல்லாண்டு நிலவும் மௌனத்தைக் கலைத்து மனித உரிமை பற்றிப் பேச முன்வந்தார்கள் பெண்கள். அதிலிருந்து எல்லா சமுதாயங்களிலிருந்தும் பெண்கள், ஆட்களின் திடீர் மறைவு பற்றி நீதி கோருவதற்கும், அமைதியும் வாழ்வும் கோருவதற்கும் உள்ளநிறுவனங்களில் சேர்ந்து செயல்படுகிறார்கள்.

**பழமைவாதிகள் பெண்கள் சமஉரிமை கோருவதன் மூலம் பழைய மரபும் பண்பாடும் அழிகிறது என்று வாதிடுகிறார்கள். நீங்கள் அதை ஒப்புக்கொள்கிறீர்களா?**

தெற்காசியாவில் பழங்கால பண்பாட்டுச் சுமை இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய அரசியல், தேர்தல் இயக்கங்கள் நமது மரபு பெரியது. நம் நாகரிகம் சிறந்தது என்று பேசுகிறார்கள். பழங்காலத்து நல்ல

மரபுகளுக்கு நாம் வாரிசாக இருக்கிறோம் என்பதில் ஐயமில்லை. அவற்றைக் காப்பதும் அவசியம். ஆனால் பால், மதம், சாதி இவை காரணமாக பண்பாட்டையும் மதத்தையும் பயன்படுத்துவது சரியாகுமா?

பழமைவாதிகள் பெண்களைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதால் சமூகத்தை கையில் வைத்திருக்க முடிகிறது. முன்னைவிட இப்போது வரலாற்றில் பெண்கள் பண்பாட்டையும் மரபுகளையும் உருவாக்கு பவர்களாகஇருக்கிறார்கள். இதை பெண்கள் அணிய வேண்டிய ஆடைபற்றிய விதிகளில் இருந்து அறியலாம். முற்காலத்தை விட இப்போது ஆடை பற்றிய விதிகள் கண்டிப்பான முறையில் உள்ளன. அடிப்படை வாதமும் ஆசாரமும் கடைப்பிடிக்கப்படும் சமூகத்தில் நாம் வாழ்வதாக எண்ணுகிறேன்.

மதத்தைக் காரணமாகச் சொல்லி பெண்களின் மீதுள்ள கட்டுப்பாட்டைத் தொடர்ந்து வைத்திருக்க எண்ணுபவர்கள் பழமைவாதிகள். இஸ்லாம், இந்து, பௌத்த மதப் பழக்கவழக்கங்களுக்கும் சம்பந்தமில்லை என்று நான் திடமாக நம்புகின்றேன். ஆண் மதத் தலைவர்கள் மத நூல்களுக்குத் தங்கள் வசதிக்குத் தக்கபடி விளக்கம் சொல்வதைப் பொறுத்து மதப்பழக்க வழக்கங்கள் அமைகின்றன.

சமூகத்துப் பொருளாதார அரசியல் வாழ்க்கையில் பெண்கள் அதிகம் பங்குகொள்வதானது பண்பாட்டு மற்றும் மரபுவகைத் தடைகளுக்குச் சவால் விடுப்பது போலாகும். சமூக பொருளாதார மாற்றங்களால் குடும்பம் எனும் கட்டுக் கோப்பே மாறிவருகிறது. உலகமயமாக்கல் காரணமாக பெண்கள் சுதந்திரமானவர்களாக ஆகிவருகிறார்கள். ஆண்களின் ஆதிக்கம் குறைய நேரிடுகிறது. அதனால் தான் பெண்கள் சம உரிமை கொண்டாடுவது பற்றிக் குறை கூறப்படுகிறது.

தகவல் - சூரியர்

## கலாசாரக் குழப்பாடல்

பெண்ணென்ற போர்வையால் எம்மை – தினம்
வீட்டுக்குள்ளேயே பூட்டியே வைப்பார்
சமுதாயம் என்கின்ற பேய்தான் பெண்ணின்
பழமொழி சொல்லி பாழாக்கி வைக்கும்

பொம்பிள சிரிச்சா போச்சு – அந்த
போயில விரிச்சா போச்சு என்றே
பெண்ணின் ஆசையை எல்லாம் – சிலர்
ஆண்டாண்டு காலமாய் அடக்கியே வைத்தார்.

பெண் புத்தி பின் புத்தி என்றே – பெண்ணை
பின்னுக்கு வைத்து வேடிக்கை பார்க்கும்
ஆண்கள் தான் எல்லாமே என்று – பெண்ணின்
உரிமையை என்றுமே தள்ளியே வைக்கும்.

கெட்ட கனவுகள் நினைந்து – உன்னை
பட்டமரமாக நினையாதே பெண்ணே
கட்டுப்பாடுகளை மீறி – நீயும்
சுயமாக சிந்தித்து உரிமையைத் தேடு.

பெண் என்று எண்ணி விடாதே – உன்னால்
பெருமைகள் பலவுண்டு முடங்கி விடாதே
கல்வியை துறை போகக் கற்றால் – நாமும்
கலங்காமல் நாளுமே வாழ்ந்திட முடியும்.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
46/2, பழையவாடி வீட்டுத் தெரு,
மட்டக்களப்பு.
தொ. பேசி - 23297

முகவரி :- ..............................

MAY 2000